**V. NARAYANASAMY**
CHIEF MINISTER
GOVERNMENT OF PUDUCHERRY

✆ Off. : 0413-2333399, 2335530
2335328, 2335522
Fax : 0413-2333135
Res. : 0413-2339099

Date : 24/06/2017

No.1959/CM/Mssg/2017/14

# ரமலான் வாழ்த்துச் செய்தி

உலக மக்களுக்கெல்லாம் ஈகையின் மகத்துவத்தை உணர்த்தும் அற்புதத் திருநாளாக ரமலான் விளங்குகிறது. அனைவரிடத்திலும் அன்பு பாராட்டி, நட்புணர்வையும், சகோதரத்துவத்தையும் வளர்த்தெடுக்கும் நாளாக ரமலான் திகழ்கிறது. அனைத்து மதத்தினரும் சகோதர உணர்வுடன் வாழ்ந்திடும் இந்தியத் திருநாட்டில் அப்பண்பிற்கு அடித்தளமிடும் வகையில் இத்திருநாள் அமைந்துள்ளது. தன்னை வருத்தி வைக்கப்படும் கோரிக்கைகளை இறைவன் உடனடியாக நிறைவேற்றுவார்.

நபிகள் நாயகம் அவர்கள் "ஏழைகளுக்கும் முடியாதவர்களுக்கும் உன் வருவாயில் ஒரு பங்கை கொடு. அதுதான் சிறந்த சேவை" என்று அறிவுறுத்திக் காட்டியுள்ளார். அதையும் அவரே கடைபிடித்துள்ளார்.

நம்நாட்டில் பெரும்பான்மை சமுதாயத்தினரில் சிலர் சிறுபான்மையினரைத் தாக்குவதும் துன்புறுத்துவதும், சிறுபான்மை மக்களுக்கு உள்ள உரிமையைப் பறிப்பதுமான வேலையில் இப்போது இறங்கியுள்ளனர். இதனால் நாட்டில் அமைதியின்மை ஏற்பட்டுள்ளது. இந்த நாளில் அனைத்து மதத்தினரும் சகோதரத்துவத்தோடு நபிகள் நாயகம் அவர்களின் அறிவுரையை ஏற்று வாழ்வோம் என்று உறுதிகொள்வோம்.

இஸ்லாமிய சகோதர சகோதரிகள் கடுமையான நோன்பிருந்து வைக்கும் வேண்டுதல்களை இறைவன் நிச்சயம் நிறைவேற்றிடுவார். உலக மக்கள் அனைவரும் ஒற்றுமையுடனும், சகோதரத்துவத்துடனும், வளமுடனும், நலமுடனும் வாழ இந்நாளில் இறைவனை வேண்டிக்கொண்டு, அனைத்து இஸ்லாமிய சகோதர சகோதரிகளுக்கும் எனது இனிய ரமலான் தின வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வே. நாராயணசாமி

(வே. நாராயணசாமி)